பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 03 2026 TUESDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பீகார் மாநிலத்திலிருந்து முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார், பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்ட ஐந்து பேர் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- வரும் நிதியாண்டிற்கான ரயில்வே மானிய கோரிக்கைகள் குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

- கத்தார் நாட்டிலிருந்து புதுதில்லி, மும்பை உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு ஆயிரத்து 100 இந்தியர்கள் புறப்பட்டுச் சென்றதாக தோஹாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

- ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை ஒன்றின்மீது, பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் 400 பேர் உயிரிழந்தனர், 250க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

- ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், பஞ்சாப் – கோவா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிரா ஆனது.

>>>>>><<<<<<

பீகார் மாநிலத்திலிருந்து முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார், பிஜேபி தேசியத் தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்ட ஐந்து பேர் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல், ஒடிசா மாநிலத்திலிருந்து 3 பேரும், ஹரியானா மாநிலத்திலிருந்து ஒருவரும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நாடுமுழுவதும், 10 மாநிலங்களிலிருந்து 37 பேரை மாநிலங்களவைக்கு தேர்வு செய்வதற்கான தேர்தலில், 26 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

எஞ்சிய 11 இடங்களுக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.

இதில் பீகார் மாநிலத்திலிருந்து போட்டியிட்ட திரு. நிதிஷ்குமார், திரு. நிதின் நபின் உள்ளிட்ட 5 பேரும். ஒடிசாவிலிருந்து 3 பேரும் என 8 பேர் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் வெற்றிபெற்றுள்ளனர்.

ஒடிசாவிலிருந்து பிஜு ஜனதா தள கட்சியைச் சேர்ந்த ஒருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஹரியானாவிலிருந்து 2 பேரை தேர்வு செய்வதற்கான தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், முறைகேடுகள் தொடர்பான புகார் காரணமாக வாக்கு எண்ணிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

வரும் நிதியாண்டிற்கான ரயில்வே மானிய கோரிக்கைகள் குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

முன்னதாக, இந்த விவாதத்தை மக்களவையில் தொடங்கி வைத்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. தாரிக் அன்வர், மத்திய அரசு ரயில்வே துறையில் அதன் இலக்குகளை எட்டத் தவறிவிட்டதாக குறை கூறினார்.

அம்ரித் பாரத் ரயில் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆயிரத்து 337 ரயில் நிலையங்களில் இதுவரை 160 ரயில் நிலையங்களில் மட்டுமே மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பயணிகள் பாதுகாப்பு என்ற பெயரில் வெறும் அறிவிப்புகளை மட்டுமே அரசு வெளியிடுவதாக திரு. தாரிக் அன்வர் குறிப்பிட்டார்.

தொடர்ந்துபேசிய பிஜேபி உறுப்பினர் திரு. கணேஷ் சிங், ரயில்வே துறை கடந்த பத்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடைந்திருப்பதாக தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதுடன், ரயில் இணைப்புகள் விரிவுபடுத்தப்பட்டிருப்பதாக திரு. கணேஷ் சிங் கூறினார்.

இந்நிலையில், நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் இன்று தாக்கல் செய்யவுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம், கடந்த பிப்ரவரி மாதத்தில் 4 புள்ளி ஒன்பது சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

*15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோரின் வேலைவாய்ப்பின்மை விகிதம், கிராமப்புறங்களில் 4 புள்ளி இரண்டு சதவீதமாக நீடிப்பதாகவும், நகர்ப்புறங்களில் 6 புள்ளி ஆறு சதவீதமாக குறைந்திருப்பதாகவும் மத்திய புள்ளியில் மற்றும் திட்ட அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*15 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம், 5 புள்ளி ஒரு சதவீதமாக குறைந்துள்ளதாகவும், இது கடந்த ஜனவரி மாதத்தில் 5 புள்ளி ஆறு சதவீதமாக இருந்த் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*கத்தார் நாட்டிலிருந்து புதுதில்லி, மும்பை, கொச்சி உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு ஆயிரத்து 100 இந்தியர்கள் நேற்று புறப்பட்டுச் சென்றதாக தோஹாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.*

*மேலும் இந்த நகரங்களுக்கு இன்றும் விமானங்கள் இயக்கப்படவிருப்பதாக இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*இதேபோல், அஹமதாபாத், அம்ரிஸ்டர், பெங்களூரு, சென்னை, தில்லி, ஹைதராபாத், கொச்சி. கோழிக்கோடு மற்றும் மும்பை நகரங்களுக்கு கத்தார் ஏர்வேஸ் நிறுவனம், நாளை முதல் விமானங்களை இயக்கவுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த விமானங்களில் பயணிக்க விரும்புவோர், இணையதளம் மற்றும் மொபைல் செயலி மூலமோ, பயண முகவரை தொடர்பு கொண்டோ தேவையான தகவல்களை அறிந்து கொள்ளலாம் என்று இந்திய தூதரகம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஈரானில் தற்போது வசிக்கும் இந்தியர்கள், டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் முன்அனுமதி இல்லாமல் எல்லைப்பகுதிகளை கடக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.*

*நிலப்பகுதி வழியாக ஈரானை விட்டு வெளியேற முயற்சிக்கும் இந்தியர்கள் தூதரக வழிகாட்டுதலின்றி, வெளியேற வேண்டாம் எனவும், குடியுரிமை பிரச்சினைகள் மற்றும் தீவிர*

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால், எச்சரிக்கையுடன் இருக்குமாறும் இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஈரான் எல்லைப் பகுதியை விட்டு, தனிநபர்கள் வெளியேற வேண்டுமானால், முன்அனுமதி பெற வெண்டும் என்றும், அங்குள்ள இந்திய சமூகத்தினருடனான ஒருங்கிணைப்பு அவசியம் என்றும் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஈரானுக்கு எதிரான தாக்குதல் நீண்டகாலம் தொடரக்கூடாது என்பதில் ரஷ்யா உறுதியுடன் உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றில், தாக்குதல் நீடிக்கும் பட்சத்தில் மேற்காசிய நாடுகளுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம், அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு காண வேண்டும் என்பதையும் திரு. புட்டின் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள மருத்துவமனை ஒன்றின்மீது, பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் 400 பேர் உயிரிழந்தனர், 250க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில், மருத்தவமனையின் பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்ததாக தாலிபான் அரசு செய்தி தொடர்பாளர் திரு. Zabihullah Mujahid தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் வான் பரப்பை பாகிஸ்தான் ராணுவம் மீண்டும் அத்துமீறியிருப்பதாகவும், போதைப்பொருள் மறுவாழ்வு மருத்துவமனையை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இருநாடுக்கும் இடையேயான பொதுவான எல்லையில் இருதரப்பினரும் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபடுவதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்த சில நிமிடங்களில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

*இந்நிலையில், பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் உள்ள அந்நாட்டு ராணுவ முகாம் மீது, ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் பகுதியில் பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய தமிழ்மகன் என்பவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அம்மாவட்ட மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*கடந்த 2020ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்த சம்பவம் குறித்த விசாரணை நிறைவடைந்த நிலையில் நீதிபதி திரு. முருகன் நேற்று தீர்ப்பளித்தார்.*

*சம்பந்தப்பட்ட பெண்ணின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், 5 ஆயிரம் ரூபாய் அபராதமும், பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனையுடன் 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.*

*தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*இலங்கையில் பெட்ரோலியப் பொருட்களின் தட்டுப்பாட்டை சமாளிக்க ஏதுவாக, அரசு அலுவலகங்கள், பல்கலைக் கழகங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு புதன்கிழமை தோறும் கூடுதலாக விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*நாளை முதல், இது அமலுக்கு வரும் என்று அந்நாட்டு அத்தியாவசிய சேவைகள் துறையின் தலைமை ஆணையர் தெரிவித்துள்ளார்.*

*இந்த அறிவிப்பு நீதிமன்ற சேவைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.*

*பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள் பயன்பாட்டை குறைக்கும் நோக்கில் மறுஉத்தரவு வரும் வரை அரசு நிகழ்ச்சிகள் அனைத்தையும் அதிகாரிகள் ஒத்தி வைத்துள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*உத்ராகண்ட்டின் பல்வேறு பகுதிகளிலும், அடுத்து வரம் நாட்களில் லேசான மழைப் பொழிவுடன், பனிப்பொழிவும் தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மலைப்பகுதி மாவட்டங்களில் இன்று ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், சமவெளிப் பகுதியில் வறண்ட வானிலை நிலவும் என்றும் அந்த மையத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.*

*உத்தர்காசி, ருத்ரபிரயாக், சமோலி, பாகேஷ்வர், பித்தோரகார் மாவட்டங்களில், 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில், புழுதிக் காற்றுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், பஞ்சாப் - கோவா அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் டிரா ஆனது.*

*புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.*

*>>>>>><<<<<<*

*Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி ஃபிரான்ஸில் இன்று தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*